74—

நினைவுச் சின்னம்

***51562—திரு. இரா. மாணிக்கம்:**

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளித்தலை தொகுதி, நங்கவரத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

குளித்தலை தொகுதி, நங்கவரத்தில் முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம் அவர்கள்.*

திரு. இரா. மாணிக்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். 1957 ஆம் ஆண்டு குளித்தலை தொகுதியில் முதன்முதலாக சட்டமன்ற உறுப்பினராக முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் இருந்த காலத்தில், அந்தத் தொகுதிக்குட்பட்ட நங்கவரம் பகுதியில், நங்கவரம் பண்ணையாளர்களின் ஆதிக்க வெறியினால் அநீதி இழைக்கப்பட்ட விவசாய பெருங்குடி மக்களுக்காக, 'உழுத நிலம் உழுதவனுக்கே சொந்தம்' என்ற உரிமையை மீட்டுக் கொடுக்க, மாபெரும் போராட்டத்தை நடத்தினார். 1957 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் அந்தப் பகுதியிலே 10 நாட்களுக்கும் மேலாக தங்கியிருந்து, 10,000–க்கும் மேற்பட்ட விவசாய பெருங்குடி மக்களை ஒன்று திரட்டி, மாபெரும் போராட்டத்தை நடத்தி, பண்ணையாளர்களிடமிருந்து நிலங்களை மீட்டுக் கொடுத்து, ஏழை விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றினார். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கும் விவசாயக் குடும்பத்தினர், அவர்களின் சந்ததியினர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை தெய்வமாக வழிபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதே அவையில் 66 ஆண்டுகளுக்கு முன்பு 4–5–1957–ல் முத்தமிழறிஞர்*

2023 மார்ச் 30]

டாக்டர் கலைஞர் அவர்கள், அவர்களது கன்னிப் பேச்சில், 'கையேறு வாரம், மாட்டேறு வாரம்' என்ற அடிமைத்தனத்தை எதிர்த்து, 'நாடு பாதி; நங்கவரம் பாதி' போராட்டம் பற்றி பேசியிருந்தார். அந்தக் கன்னிப் பேச்சு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக விளங்கியது. அப்போது, சட்டமன்றப் பேரவைத் தலைவராக இருந்த மாண்புமிகு திரு. கிருஷ்ணாராவ் அவர்கள், 'very good speech' என்று துண்டுச் சீட்டு எழுதி அனுப்பினார். அன்றைய அமைச்சரும், பிற்காலத்தில் முதலமைச்சராகவும் இருந்த காங்கிரஸ் தலைவர், பெரியவர் திரு. பக்தவச்சலம் அவர்கள், 'நான் கலைஞரைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன், இன்று அவருடைய பேச்சைக் கேட்டு வியந்தேன்' என்று பாராட்டினார். (மணியடிக்கப்பெற்றது) சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நங்கவரம் போராட்டத்தின் வரலாற்றை. பிற்கால சந்ததியினர் தெரிந்துகொள்ளும் வகையில், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடுகின்ற இந்த ஆண்டில், போராட்டம் நடைபெற்ற நங்கவரம் பகுதியில் நினைவுச் சின்னம் அமைத்து, கலைஞர் அவர்களுக்குப் புகழ் சேர்க்க வேண்டுமாய் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் முதல் தொகுதி மக்களின் சார்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களையும் தங்கள் வாயிலாக மெத்தப் பணிவோடு கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்களுடைய போராட்டம் என்பது மிகப் பெரியதும், வரலாற்றிலே குறிப்பிட வேண்டிய ஒன்றும் ஆகும். நமது தாய்மொழிக்கு வந்த ஆபத்தை எதிர்த்து போராடத் துவங்கியதிலிருந்து, நங்கவரம் விவசாயிகளுக்காக இருந்தாலும் சரி, தொழிலாளர் தோழர்களுக்காக இருந்தாலும் சரி, அனைத்துப் போராட்டங்களையும் கையிலெடுத்து, அன்றைக்கு மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை எதிர்த்துப் போராடினார்கள். எனவே, நூற்றாண்டு காணக்கூடிய இந்தக் காலகட்டத்தில், முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்களுக்கு நினைவுச் சின்னம் வைக்கின்றபோது, அனைத்து இடங்களிலும்கூட வைக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கும். இருந்தாலும், விவசாயிகளுக்காக அன்றைக்கு நடந்த*

இந்தப் போராட்டம் குறித்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார். ஏற்கெனவே வரலாற்றில் இடம் பெற்ற ஒரு போராட்டம். எனவே, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று அதுகுறித்து துறை நிச்சயமாகப் பரிசீலிக்கும்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம், நன்றி சொல்லி அமருங்கள்.*

திரு. இரா. மாணிக்கம்: *துறை நிச்சயமாகப் பரிசீலிக்கும் என்ற மகிழ்ச்சியான அறிவிப்பைக் கொடுத்த மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சேலத்திற்குச் சென்றிருந்தபொழுது,* Modern Theatres-*னுடைய சிறப்புகளை எல்லாம், அந்த திரையரங்கம் முன்பு நின்று சொல்லியிருந்தார். அப்படிப்பட்ட* Modern Theatres-*னுடைய நிறுவனர் திரு.* T.R. *சுந்தரம் அவர்கள், திருச்செங்கோட்டில் பிறந்தவர். அவருக்கு அங்கே ஒரு நினைவிடம், மணிமண்டபத்தோடு கூடிய அரங்கம் அமைக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நிதி நிலைமையை, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள் நன்கு அறிவார்கள். இருந்தாலும், நிதி நிலைமைக்கேற்ப எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* G.V. *மார்க்கண்டேயன் அவர்கள்.*

2023 மார்ச் 30]

திரு. G.V. மார்க்கண்டேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், வடமலாபுரம், அரவிந்த் கண் மருத்துவமனையினுடைய நிறுவனர், திரு. வெங்கடசாமி அவர்கள் பிறந்த ஊர். அவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு மருத்துவம் பார்த்தவர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அமெரிக்கப் பயணத்தின்போது, அமெரிக்க நாட்டில் அவர் பணி செய்து கொண்டிருந்தார். முத்தமிழறிஞர் அவர்கள், அவரை அழைத்து வந்து, தமிழகத்திலே கண் மருத்துமனையைத் தொடங்க வைத்து, ஒரு துறையை அரசின் சார்பிலே உருவாக்க வைத்தார்கள். அவர் பத்மவிபூஷண், பத்மபூஷண் போன்ற பல்வேறு விருதுகளைப் பெற்றவர். நாடு முழுவதும், புரை நீக்குதல் நோயைக் கட்டுப்படுத்துவதற்காகவும், கண்ணொளி வழங்குவதற்காகவும் தன் வாழ்நாளையே அர்ப்பணித்தவர். சுதந்திரப் போராட்ட தியாகிகள், கலை இலக்கிய உணர்வாளர்கள் என மற்ற பல்வேறு சிறப்பு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்க்கண்டேயன், என்ன வேண்டுமென்று கேளுங்கள். (குறுக்கீடு)

திரு. G.V. மார்க்கண்டேயன்: மற்றவர்களுக்கெல்லாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிலைகளை நிறுவியும்,மணிமண்டபம் அமைத்தும்,புகழைச் சேர்த்திருக்கிறார்கள். அதுபோன்று, அரவிந்த் கண் மருத்துவமனை நிறுவனரான திரு. வெங்கடசாமி அவர்களுக்கு, அவர் பிறந்த ஊரான விளாத்திகுளம் தொகுதியில் நினைவிடம் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரவிந்த் கண் மருத்துவமனை நிறுவனர் திரு. வெங்கடசாமி அவர்களுக்கு நினைவிடம் அமைக்கப்படுமா என்று கேட்கிறீர்கள். மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள், பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, நம்முடைய திருச்செங்கோடு தொகுதியினுடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்களுக்கு சொன்ன பதிலையே இதற்கும் தெரிவிக்கிறேன். எதிர்காலத்திலே, பரிசீலிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

[2023 மார்ச் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 75, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

75—

தெரு விளக்குகள்

***38274—திரு. வி.பி. நாகைமாலி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்வேளூர் தொகுதி, வாழக்கரை ஊராட்சி, தெற்குத் தெருவில் மின்கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதி, வாழக்கரை ஊராட்சியில், தெற்குவெளி செல்லும் சாலை என்ற இடத்திற்கு 35 எண்ணிக்கையிலான தெரு விளக்குகள் அமைப்பதற்கு 31–1–2023 அன்று விண்ணப்பப் பதிவுக் கட்டணம் ஊராட்சியால் செலுத்தப்பட்டு, உரிய மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, 27–2–2023 அன்று, நாகப்பட்டினம் S.E. அவர்களால் உரிய அனுமதி வழங்கப்பட்டது. 17–3–2023 அன்று இதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.8,22,890/– திருக்குவளை பிரிவு அலுவலகத்தில் செலுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட தெரு விளக்குகள் அமைப்பதற்கான 35 மின் கம்பங்கள் நடப்பட்டு, மூன்றரை கிலோ மீட்டர் நீளத்திற்கு மின் பாதை அமைக்கப்பட்டு வருகின்றது. பணிகள் விரைவாக முடிக்கப்பட்டு, அதற்கான மின் இணைப்புகள் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.